[1987 ஏப்ரல் 8

மாவட்டத் தொழில் மைய மேலாளர்கள்.

339—(* வினா எண் 3863) திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தொழில் மையங்களில் மேலாளர் (பொருளியல் ஆய்வு) பதவிகள் நிரப்பப்படாததின் காரணம் என்ன?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வணிகத் துறையில், தொழில் நுட்பத் தகுதி வாய்ந்த நபர்கள் இல்லாததால் தமிழகத்தில் உள்ள மாவட்டத் தொழில் மையங்களில் மொத்தம் உள்ள 14 மேலாளர் பணியிடங்களில் 7 நிரப்பப்படவில்லை. ஆகையால் இத்துறையில் உள்ள இதர அலுவலர் மூலம் இப்பதவிகளை நிரப்புவதற்காக அதற்கு தகுந்தாற்போல் தற்காலிக விதிகளை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதற்குப் பின்னாலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது 7 பேர்களை மேலாளர்களாக நியமித்து இருப்பதாகவும், 7 பேர்கள் மேலாளர்களாக அந்தத் துறையிலே பணியாற்றுகிறவர்கள் தான் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சொல்கிறார்கள். ஏற்கெனவே டெக்னிக்கல் குவாலிபிகேசனோடு நிறைய பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழு மூலமாகவோ, அல்லது நேரடியாகவோ அந்த டெக்னிக்கல் குவாலிபிகேசன் உள்ளவர்களை நியமிப்பதற்கு, அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது மேலாளர் பதவி, அவர்கள் கீழ்மட்டத்தில் பணியாற்றி, படிப்படியாக பதவி உயர்வு பெறுகிறபோதுதான் முழுமையாக அந்த மேலாளர் பதவியை நிர்வகிக்க முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். இருந்தாலும் கூட அந்த அனுபவத்தில் உள்ளவர்கள் யாராவது வெளியிலே இருக்கிறார்களா என்பதைப் பற்றி தனியாக ஆய்வு செய்யலாம். ஆனால் சிறந்த அனுபவம் உள்ளவர்களால்தான் அந்த இடத்திலே பொருத்தமாக பணியாற்ற முடியும் என்பதால் அந்தப் பதிலை நான் சொன்னேன்.